THE HON. SRI M. BHAKTAVATSALAM : அந்த விவாத அரங்கு களில், விவசாய சம்பந்தமான செய்திகளை விவசாயிகளுக்கு எப்படித் தெரி விப்பது என்பது பற்றி முடிவு செய்யப்பட்டது. அடுத்த அரங்கிற்கு கனம் அங்கத்தினர்களை அழைக்கிறேன். அவர்கள் அங்கு வந்து நடவடிக்கை களை கவனிக்கலாம்.

MR. SPEAKER : Question No. 728 has been postponed at the request of the Hon. Minister.

Fertilizer

*729 *Q*.—SRI S. M. ANNAMALAI (on behalf of SRI M. P. SARATHY) : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) இந்த ஆண்டு இந்த ராஜ்யத்துக்குத் தேவை என்று கேட்ட ரசாயன உரத்தின் அளவு என்ன ?

(ஆ) இந்த ராஜ்யத்துக்கு ஒதுக்கப்பட்ட அளவு என்ன ?

(இ) இந்த உரம் எவ்வாறு விநியோகிக்கப்படுகிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : A paper [a] is placed on the table of the House.

SRI S. M. ANNAMALAI : இந்த மாநில அரசாங்கம் எவ்வளவு ரசாயன உரம் கோரியதோ அதில் 55 சதவிகிதம்தான் இந்த மாநிலத்திற்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த மாநிலத்திற்கு இது அதிகம் கிடைக்கச் செய்வதற்கு இந்த மாநில சர்க்கார் என்ன முயற்சி எடுத்துக்கொண் டிருக்கிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ரசாயன உரத்தை நாம் வெளி நாடுகளிலிருந்து வரவழைப்பதனுல், அன்னியச் செலாவணி அதிக மாக ஆகிறது. அப்படி ஆனலும் அதிகமாக இதை வெளி நாடுகளி லிருந்து வரவழைக்க வேண்டுமென்று இந்த அரசாங்கம் மத்திய அர சாங்கத்திடம் வற்புறுத்தி வருகிறது. நமது மாநிலத்திற்கு, ரசாயன உரம் இந்த ஆண்டில் கிடைத்ததை விட அதிகமாக அடுத்த ஆண்டில் கிடைக்கும் என்று நம்பப்படுகிறது. மேலும் தஞ்சாவூரில் நடத்தப்படும் " பாகேஜ் ஸ்கீம் " என்ற தீவிர விவசாய உற்பத்தித் திட்டத்திற்கு வேண்டிய உரத் திற்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

SRI T. KARIA GOUNDER : சபாநாயகர் அவர்களே, இந்த உர விநியோகமானது ஏப்ரல் 1-ந் தேதியிலிருந்து தனியார் துறையில் செய் பவர்களை விலக்கி கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கொடுப்பது என்ற முடிவை சர்க்கார் அமுல் நடத்தினர்களா என்று அறிய விரும்புகிறேன்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : முடிவு செய்யப்பட் டிருக்கிறது. இனி அது அமுலுக்கு வரும்.

SRI K. B. S. MANI : இந்த உர விநியோகம் சம்பந்தப்பட்ட முறையில் தஞ்சை ஜில்லாவில் அமுலில் இருக்கும் " பாக்கேஜ் ஸ்கீம் " உரங்கள் முன் கூட்டியே கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : முன்பே பதிலில் சொன்னேன். இந்தத் திட்டத்தின் கீழ் எவ்வளவு உரம் வேண்டுமோ அவ்வளவையும் தஞ்சை ஜில்லா பெற ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. போன வருஷம் எவ்வளவு கொடுக்கப்பட்டதோ அதைப் போல் இரட்டிப் பான அளவுக்கு உரம் தஞ்சைக்கு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டிருக் கிறது. உடனடியாக 15,000 டன் தருவதாக இருக்கிருர்கள்.

---

[a] Printed as Appendix II on pages 325–326 infra.

19th April 1960]

Sri V. K. KOTHANDARAMAN : தேவையான அளவுக்கு உரம் இல்லாத காரணத்தினாலும் இப்போது செய்யக்கூடிய விநியோக முறையினாலும் பலவித ஊழல்கள் ஏற்படுகின்றன என்பது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? சமீபத்தில் சர்க்கரை நெருக்கடியைத் தீர்க்க எப்படி கார்டு சிஸ்டம் கொண்டு வரப்பட்டதோ அதே போன்று இதற்கும் கார்டு சிஸ்டம் கொண்டு வரப்படுமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : பற்றாக்குறை காரணமாக கள்ள மார்க்கட் போன்ற ஊழல்கள் ஏற்படுவது சகஜந்தான். அதை அரசாங்கம் நன்றாக உணர்ந்திருக்கிறது. பற்றாக்குறையை நீக்க அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது. இருக்கக் கூடிய பற்றாக்குறை நிலைமையில் எவ்வளவு தூரம் ஊழல்களை அகற்றி சீரான நிலைமையில் உர விநியோகம் செய்ய முடியுமோ அதில் அரசாங்கம் கவனம் செலுத்திக் கொண்டுதான் வருகிறது. உதாரணமாக சமுதாய நலத் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிற இடங்களில் எல்லாம் பஞ்சாயத்துத் துறையினரிடம் பொறுப்பையளித்து ஒவ்வொரு கிராமத்திலும் ஒழுங்கான முறையில் உரம் விநியோககிக்கப்படுவதற்காக திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது.

Sri K. R. NALLASIVAM : நைட்ரஜன் வகையராக்களைச் சேர்ந்த உரங்கள் எந்த அளவுக்கு விற்கப்படுகின்றனவோ அந்த அளவுக்கு சூபர் பாஸ்பேட் வகையராவைச் சேர்ந்த உரம் விற்கப்படாமல் தேங்கிக் கிடக்கிறதா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: எந்த அளவுக்கு விற்கப்படுகிறது என்ற தகவல் என்னிடம் இப்போது இல்லை. சூபர் பாஸ்பேட் எந்த அளவுக்குக் கேட்கிறார்களோ அந்த அளவுக்குக் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

Sri P. M. MUNUSAMI GOUNDER : இந்த ரசாயன உரம் அயல் நாட்டில் இருந்து வரவழைக்கப்படுவதாகச் சொன்னார்கள். எந்தக் கம்பெனியின் மூலமாக வரவழைக்கப்படுகிறது ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இந்த அரசாங்கம் நேரடியாக வரவழைப்பதில்லை. மத்திய அரசாங்கம் வாங்கி நமக்குக் கொடுக்கிறது. இது பற்றிய விவரம் இப்போது இல்லை.

Sri A. VEDARATHNAM : இந்த மேஜையின் மேல் வைக்கப்பட்டுள்ள அறிக்கையைப் பார்த்தால் யூரியா மட்டும் நாம் கேட்டதைக் காட்டிலும் அதிகமாகக் கொடுத்திருப்பதாகத் தெரிகிறது. அந்த யூரியா தரக் குறைவு என்ற காரணத்தால் அவ்வாறு கொடுக்கப்படுகிறதா ? அல்லது டாலர் தடை அதற்குக் கிடையாது என்ற காரணத்தால் கொடுக்கப்படுகிறதா ? அது நல்ல உரமாக இருக்குமானால் கேட்டதைக் காட்டிலும் அதிகமாகக் கிடைக்கும் அந்த உரத்தை அதிகமாகத் தருவித்து விநியோகம் செய்ய ஏற்பாடு செய்யப்படுமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : எது எது எந்தெந்த அளவுக்குக் கிடைக்கிறதோ அந்த அளவுக்குப் பெற்றுக் கொள்ளப்பட்டு விநியோகிக்கப்படுகிறது. யூரியா நல்ல உரந்தான். விவசாயிகள் அதைப் பாராட்டி உபயோகித்துக் கொண்டு வருகிறார்கள். அம்மோனியம் சல்பேட் பற்றாக்குறையைச் சமாளிக்கும் வகையில் இப்போது கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

Sri P. G. MANICKAM : நாம் இந்திய அரசாங்கத்தைக் கேட்டிருப்பது 160,000 டன் அம்மோனியம் சல்பேட் உரம். ஆனால் அவர்கள் கொடுத்திருப்பதோ 83,200 டன் தான். விவசாயிகளுக்கு அத்தியா

வசியமாக இருப்பது அம்மோனியம் சல்பேட். இது மிக மிகக் குறைவாக சப்ளை செய்யப்படுகிறது. இந்த வருஷமாவது அதிகப்படியான சப்ளை செய்யும்படி நமது அரசாங்கம் மத்திய அரசாங்கத்தைக் கேட்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஓரளவு அம்மோனியம் சல்பேட் சப்ளை அதிகப்படும். அம்மோனியம் சல்பேட்டுக்குப் பதிலாக யூரியாவை உபயோகிக்க முற்படவேண்டும்.

SRI S. M. ANNAMALAI : இந்த மேஜையின் மேல் வைக்கப்பட்டுள்ள அறிக்கையில், ஒரு தாலூகாவில் கோவாப்பரேட்டிவ் சொசைடி மூலமாக ஒன்றும், தனியார் துறையில் மூன்றுமாக, 4 பேர் மூலமாக ரசாயன உரத்தை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதை மாற்றியமைத்து " நான் ப்ளாக் ஏரியா , ப்ளாக் ஏரியா " என்று பிரிக்காமல் எல்லா இடங்களிலும் கோவாப்பரேட்டிவ் சொசைடி மூலமாக உரத்தை விநியோகிக்க சர்க்கார் முயற்சி செய்வார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஏற்கனவே அவ்வாறு முடிவு செய்யப்பட்டிருக்கிறது, சீக்கிரத்தில் அமுலுக்கு வரும்.

Mounted Police

* 730 *Q.*—SRI T. S. RAMASWAMI (on behalf of SRI K. SATTANATHA KARAYALAR) : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the number of mounted police in our State; and

(*b*) the purpose for which they are utilized ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Mounted Police exists only in the Madras City Police. Its sanctioned strength is one Reserve Inspector, one Sergeant, one Daffadar, four Lance Daffadars and 26 Sowars.

(*b*) It is used when the Divisional Police are in need of it to quell riotous crowds and for bandobust duties when required. It is also utilized during important ceremonial occasions organized by the Police Department on behalf of the Government.

SRI K. VINAYAKAM : Is it the purpose of the Government to terrorise the credulous public with this mounted police ? Why should the Government maintain this archaic mounted police when quick modes of transport like the jeeps and other vehicles are available for the purpose ?

MR. SPEAKER : Strong words.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The mounted police is the best method of dealing with crowds without terrorising them. That is why the Government are having mounted police.

MR. SPEAKER : I was only pointing out to the hon. Member that words like 'terrorising' and all that are not desirable words to be used in the Assembly.

High Court's strictures on Police officials

* 731 *Q.*—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the attention of the Government has been drawn to the strictures passed recently in the course of a judgment in a murder trial by the High Court that " the conduct of the officials concerned from the Circle Inspector of Police downwards, should be